[30th July 1962

அரசாங்க உத்தியோகங்களில் அரிசனங்கள்

4. கேள்வி.—திரு ஏ. ஆறுமுகம் : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப்ப திலளிப்பாரா—

(அ) தமிழக சர்க்காரிலே இலாக்காக்கள் வாரியாக, உத்தியோக வாரியாக எத்தனை பேர்கள் பணிபுரிகிறார்கள் ?

(இ) அவர்களில் இலாக்கா வாரியாக எத்தனை அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் வேலை செய்கிறார்கள் ?

(உ) அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட சதவிகித அளவிற்கு அவர்கள் உத்தியோகத் துறையில் வாய்ப்புகள் பெற்றிருக்கிறார்களா ?

(எ) அப்படி இல்லை என்றால் அவர்களுக்கென ரிசர்வ் செய்துள்ள விகிதாசாரத்தைப் பெறுவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தேசம் ?

A—(அ) and (இ) இத்தகவல்களைச் சேகரிப்பதற்குச் செலவாகும் நேரத்திற்கும் உழைப்பிற்கும் ஏற்ப பலனோ பொது நலனோ இராது.

(உ) இல்லை.

(எ) இப்பிரச்சனையைப் பரிசீலனை செய்து, தகுந்த சிபாரிசுகள் செய்ய ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை அரசாங்கம் விரைவில் நியமிக்கும்.

நிரந்தர டூரிங் சினிமாக்கள்

5 கேள்வி.—திரு மு. கருணாநிதி : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1961-ல் தமிழ் நாட்டில் இருந்த சினிமா தியேட்டர்கள் டூரிங் சினிமாக்கள் எத்தனை ? மாவட்டவாரியாக ?

A.—The total number of permanent and touring cinemas that were in existence in 1961 in each district of this State is as follows.—

District.	Permanent.	Touring.
Madras City	41	..
North Arcot	25	78
South Arcot	27	49
Thanjavur	37	61
Tiruchirappalli	44	107
Madurai	43	80
Ramanathapuram	23	52
Tirunelveli	29	30
Coimbatore	54	95
The Nilgiris	13	6
Salem	41	61
Kanyakumari	12	2
Chingleput	27	96